

திராவிட முன்னேற்றக் கழகம் பவளவிழா ஆண்டை முன்னிட்டு ஆவுடையார்கோவிலில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழகம் ஆவுடையார்கோவில் வடக்கு தெற்கு ஒன்றிய திமுக சார்பில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக மருத்துவர் அணி சென்னை கற்பக விநாயக மருத்துவக் கல்லூரி கற்பக விநாயக பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை இணைந்து நடத்திய மாபெரும் இலவச சிறப்பு மருத்துவ முகாமில் புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர், இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி கலந்துகொண்டு முகாமினை துவக்கி வைத்தார். உடன் அடைக்கலம், முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் உதயம் சண்முகம் ,வே. பொன்துரை, க.இராஜேந்திரன், ஹரி.விமலாதிராஜன், ஆவுடையார்கோவில் வடக்கு தெற்கு ஒன்றிய கழக நிர்வாகிகள், மாவட்ட, ஒன்றிய, நகர சார்பு அணிகளின் நிர்வாகிகள், முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



நாகை மாவட்டம் நாகை நகராட்சி மகளிர் மேல்நிலைப்பள்ளியில் வெற்றிப் பள்ளிகள் (VETRI [Vibrant Education Targeting Reputed Institutions] Palligal) திட்டத்தினை பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார். உடன் நாகை மாவட்ட ஆட்சித் தலைவர் ப. ஆகாஷ், நாகை மாவட்டக் கழக செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழக தலைவருமான என்.கௌதமன், கீழ்வேளூர் சட்டமன்ற உறுப்பினர் நாகை மாலி, நாகை நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ், மாதிரிப் பள்ளிகளின் உறுப்பினர் செயலர் இரா. சுதன், பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் ச.கண்ணப்பன் மற்றும் பலர் உள்ளனர்.

### பெரம்பலூரில்

# அண்ணல் காந்தியடிகள் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை!

## கே.என். அருண் நேரு எம்.பி. – ம.பிரபாகரன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

பெரம்பலூர், அக். 4-

தேசத்தந்தை அண்ணல் காந்தியடிகளின் 157 வது பிறந்த நாளை முன்னிட்டு, அவரது திருவுருவச் சிலைக்கு பெரம்பலூர் பாராளுமன்ற உறுப்பினர் திரு.கே.என்.அருண்நேரு, மாவட்ட ஆட்சித்தலைவர் ந.மிருணாளினி தலைமையில் பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன் முன்னிலையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி - காதிகிராப்ட் அங்காடியில் தீபாவளி சிறப்பு தள்ளுபடி விற்பனையை தொடங்கி வைத்தார்!

தேசத்தந்தை அண்ணல் காந்தியடிகளின் 157 வது பிறந்த நாளை முன்னிட்டு, பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட பழைய பேருந்து நிலையம் அருகில் உள்ள அண்ணல் காந்தியடிகள் அவர்களின் திருவுருவச் சிலைக்கு பெரம்பலூர் பாராளுமன்ற உறுப்பினர் திரு. கே.என்.அருண்நேரு அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ந.மிருணாளின, தலைமையில், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன் முன்னிலையில் 02.10.2025 அன்று மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, தமிழ்நாடு கதர் கிராம தொழில் வாரியத்தின் சார்பில் காதி கிராப்ட் அங்காடியில் அண்ணல் காந்தியடிகளின் திருவுருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தி, தீபாவளி கதர் சிறப்பு தள்ளுபடி விற்பனையை தொடங்கி வைத்தார்.

அண்ணல் காந்தியடிகள் சுதேசி பொருள்களை மக்கள் பயன்படுத்த வேண்டும் என்பதற்காக கையால் நூற்கும் இராட்டைகளை பயன்படுத்தி, கதர் நெசவில் ஒரு மாபெரும் புரட்சியினை ஏற்படுத்தினார்.

தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியம் மகாத்மா காந்தியடிகள் வழியில், தமிழ்நாட்டில் பல இலட்சக் கணக்கான ஏழை, எளிய, நூல் நூற்போர், நெசவு நெய்வோர் மற்றும் கைவினைஞர்களுக்கு இடையறாத வேலைவாய்ப்பினை அளிப்பதன் மூலம் அவர்களை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்டெடுக்கின்றது.

எனவே, நாம் ஒவ்வொருவரும் நம்மால் இயன்ற அளவு கதர் ஆடைகளை வாங்கி உடுத்த வேண்டும். நெசவாளர் குடும்பங்களின் வாழ்வாதாரம் மேம்பட, அவர்களின் அயர்விலா உழைப்பிற்கு உரிய அங்கீகாரம் வழங்கிட பொதுமக்கள் அனைவரும் கதராடைகளை வாங்கி உடுத்திட வேண்டும் என்ற நோக்கத்தில் இன்று தீபாவளி சிறப்பு தள்ளுபடி விற்பனை தொடங்கப்பட்டுள்ளது.

பெரம்பலூர் மாவட்டத்திற்கு இந்த ஆண்டு தீபாவளி சிறப்பு விற்பனை இலக்காக ரூ.100 லட்சம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கதர் துறையால் தயார் செய்யப்படும் அசல் வெள்ளி சரிகை பட்டு ரகங்கள், கதர் ரகங்கள், பாலியஸ்டர் ரகங்கள், உல்லன் ரகங்கள் ஆகியவைகள் வாடிக்கையாளர்களைக் கவரும் வண்ணம் புத்தம் புதிய வடிவமைப்பில் உள்ளது. சுத்தமான இலவம் பஞ்சினால் மிக நேர்த்தியாக தயார் செய்யப்பட்ட மெத்தை மற்றும் தலையணைகள், காட்டன் மெத்தை விரிப்புகள் இவை அனைத்தும் பெரம்பலூர் கதர் அங்காடியில் கிடைக்கும்.

அனைத்து கதர், பாலியஸ்டர், பட்டு இரகங்களுக்கு 30% மற்றும், உல்லன் இரகங்களுக்கு 20% அரசு தள்ளுபடி வழங்கப்படுகிறது. அரசுத்துறை பணியாளர்களுக்கு மாத ஊதியத்தில் 10 சம தவணைகளில் திரும்ப செலுத்தும் வசதிகளும் செய்யப்பட்டுள்ளது.

மேலும், கதர் வாரிய அலகுகளில் உற்பத்தி செய்யப்படும் குளியல் சோப்புகள், சலவை சோப்புகள், காலணிகள், ஜவ்வாது, ஊதுபத்தி, கப் சாம்பிராணி, சலவை திரவ சோப்புகள், கை கழுவும் திரவ சோப்புகள், சந்தன மாலைகள் உள்ளிட்ட பல பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றது.

நாம் வாங்கும் ஒவ்வொரு ரூபாய் மதிப்புள்ள கதர் மற்றும் கிராமப் பொருள் உற்பத்தி பொருள்கள், நமது கிராமங்களில் வாழும் லட்சக்கணக்கான ஏழை, எளிய குடும்பங்களின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்தி, வறுமையினை போக்கிட உதவும் எனவே, பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள அனைத்து அரசு அலுவலர்கள், பொதுமக்கள் அனைவரும் கதர் கிராம தொழில் வாரியத்தின் மூலம் விற்பனை செய்யப்படும் பொருட்களை வாங்கி நாமும் பயனடைந்து, நெசவாளர்களின் குடும்பங்களையும் பயனைய செய்ய அனைவரிடத்திலும் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், பெரம்பலூர் நகர்மன்றத் தலைவர் திருமதி அம்பிகா ராஜேந்திரன், நகர்மன்றத் துணைத் தலைவர் து.ஆதவன், கதர் அங்காடி மேலாளர் மூ. முருகன், பெரம்பலூர் வட்டாட்சியர் பாலசுப்ரமணியன், உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர்

# ரகுராம் ராஜனின் தந்தை மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, அக்.4-

இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர், தமிழ்நாடு அரசின் பொருளாதார ஆலோசனைக் குழு உறுப்பினர் ரகுராம் ராஜன் அவர்களின் தந்தை ராகவாச்சாரி கோவிந்தராஜன் அவர்களின் மறைவையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர், நமது பொருளாதார ஆலோசனைக் குழு உறுப்பினர் ரகுராம் ராஜன் அவர்களின் தந்தையும், இந்திய உளவுத் துறையில் சிறப்பாகப் பணி ஆற்றிய அதிகாரியுமான ராகவாச்சாரி கோவிந்தராஜன் அவர்கள் மறைந்த செய்தியறிந்து வருத்தமடைந்தேன்.

தந்தையாரை இழந்து தவிக்கும் ரகுராம் ராஜன் அவர்களைத் தொடர்புகொண்டு அவருக்கும் அவரது குடும்பத்தாருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்தேன்.

நம் நாட்டின் பாதுகாப்புக்காக, குறிப்பாக RAW அமைப்பு தோற்றுவிக்கப்பட்ட காலத்தில் இருந்து அதில் பணியாற்றிய சிறப்புக்குரிய ராகவாச்சாரி கோவிந்தராஜன் அவர்களின் பணி நன்றியுடன் நினைவு கூரப்படும்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



அரியலூர் மாவட்டம் ஒன்றியம், வெளிபிரிங்கியம் கிராமத்தைச் சேர்ந்த கழக மூத்த முன்னோடி, மொழிப்போர்த் தியாகி தங்கராஜ் அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 101வது பிறந்தநாள் விழா, கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்தநாள் விழா, மொழிப்போர்த் தியாகி தங்கராஜ் அவர்களின் 85வது பிறந்தநாள் விழா என நடைபெற்ற முப்பெரும் விழாவில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்து கொண்டு வாழ்த்தினார். உடன் மாவட்ட துணை செயலாளர் சி.சந்திரசேகரன், அரியலூர் தெற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் மா.அன்பழகன், அரியலூர் மத்திய ஒன்றிய கழகப் பொறுப்பாளர் தெய்வ.இளையராஜா, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், கழக வழக்கறிஞர் ஆ.கதிரவன் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் பலரும் கலந்து கொண்டு வாழ்த்தினர்.

### குன்னம் தொகுதி – வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில்

# ரூ.4.21 கோடி மதிப்பில் முடிவுற்ற திட்டப் பணிகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் திறந்து வைத்தார்!

பெரம்பலூர், அக்.4-

பெரம்பலூர் மாவட்டம், போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர், குன்னம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் ரூ.4.21 கோடி மதிப்பீட்டிலான முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்!

பெரம்பலூர் மாவட்டத்தில் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ந.மிருணாளினி தலைமையில் வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அகரம் சீகூர், சு.ஆடுதுறை, லப்பைக்குடிக்காடு, கிழுமத்தூர், புதுவேட்டக்குடி உள்ளிட்ட பகுதிகளில் ரூ.4.21 கோடி மதிப்பிலான புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது :

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய அடித்தட்டு மக்களின் நலனை கருத்தில் கொண்டு எண்ணற்ற திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக கிராமப்புறங்களின் வளர்ச்சிக்காக சாலை மேம்பாட்டு பணிகள், கழிவுநீர் கால்வாய் அமைத்தல் சிமெண்ட் சாலை அமைத்தல், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல், பாலம் கட்டுதல் என மக்களுக்கு என்ன தேவை என்பதை உணர்ந்து திட்டங்களை நிறைவேற்ற உத்தரவிட்டுள்ளார்கள்.

குறிப்பாக மாணவ மாணவிகளின் கல்வி வளர்ச்சிக்காகவும், எந்த வகையிலும் மாணவர்களின் கல்வி தடைபடாத வகையில் அவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்திட வேண்டும் என்றும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம், தமிழ்ப்புதல்வன், புதுமைப்பெண் திட்டம், அன்புக்கரங்கள் திட்டம் என ஏராளமான திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்கள். போக்குவரத்துத் துறையின் சார்பில் மாணவர்கள் பள்ளிக்கு செல்லும் நேரத்தில் அவர்களை மற்றும் ஏற்றிச்செல்லும் வகையில் மாணவர் பேருந்து என்ற திட்டம் சென்னை மாநகரத்தில் முதல்முறையாக செயல்படுத்தப்பட்டுள்ளது. இப்படி மாணவ மாணவிகளின் கல்வி மேம்பாட்டிற்காக தொடர்ந்து திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

அதனடிப்படையில், பள்ளி உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சு.ஆடுதுறை அரசு மேல்நிலைப்பள்ளியில் நபார்டு வங்கி திட்டத்தின் கீழ் ரூ.1.16 கோடி மதிப்பீட்டில் கூடுதலாக 5 வகுப்பறை கட்டடம் கட்டும் பணி , கிழுமத்தூர் அரசு மேல் நிலைப்பள்ளியில் ரூ.70.37 இலட்சம் மதிப்பீட்டில் கூடுதலாக 2 வகுப்பறை கட்டடம் கட்டும் பணி, புது வேட்டக்குடி அரசு மேல் நிலைப் பள்ளி யில் ரூ.1.40 கோடி மதிப்பீட்டில் கூடுதலாக 5 வகுப்பறை கட்டடம் அமைக்கும் பணி என மொத்தம் ரூ.23.16 கோடி மதிப்பீட்டில் 12 புதிய வகுப்பறைகள் கட்டும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. விரைந்து பணிளை தரமாக மேற்கொண்டு முடிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், 15வது நிதிக் குழு மானியம் திட்டத்தின் கீழ் அகரம்சீகூர் பகுதி பொது மக்களின் நீண்ட நாள் கோரிக்கைகளைநிறைவேற்றிடும் வகையில் ரூ.39.68 இலட்சம் மதிப்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள துணை ஆரம்ப சுகாதார நிலையத்தினையும், லப்பைக்குடிக்காடு அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ.54.75 இலட்சம் மதிப்பலான கூடுதல் கட்டடங்களும் இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வுகளில், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சு.தேவநாதன், மாவட்ட சுகாதார அலுவலர் மரு.கீதா, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் (பொ) செல்வகுமார், பொதுப்பணித்துறை (கட்டடம் மற்றும் பாரமாரிப்புத்துறை) உதவி செயற்பொறியாளர் திருமதி சரளா, உதவி பொறியாளர் பெரியசாமி, வட்டார மருத்துவ அலுவலர் மரு.சேசு, வேப்பூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சேகர், அறிவழகன் குன்னம் வட்டாட்சியர் சின்னத்துரை உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



தருமபுரி மேற்கு மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதி இளைஞர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் தருமபுரி மேற்கு மாவட்ட செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் கரூரில் த.வெ.க பிரச்சாரக் கூட்டத்தில் ஏற்பட்ட நெரிசலில் இறந்த 41 பேருக்கு இரங்கல்,கோயம்புத்தூரில் நடைபெற உள்ள மேற்கு மண்டல இளைஞரணி மாநாட்டில் திரளாக கலந்து கொள்வது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.கூட்டத்தில் மாநில இளைஞரணி துணை செயலாளர் அப்துல் மாலிக்,திருவள்ளூர் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் லோகேஷ்,தருமபுரி மேற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.சிவகுரு மற்றும் இளைஞர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



திருச்சியில் லால்குடி ஒன்றியத்திற்குட்பட்ட புள்ளம்பாடியில் பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் அருண் நேரு பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தார் நிகழ்ச்சியில் காங்கிரஸ் ஜெயபிரகாஷ், கோல்டன் ராஜேந்திரன், ஒன்றிய செயலாளர் இளங்கோவன், முத்துச்செல்வம், கருணாநிதி, வழக்கறிஞர் கவியரசன் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.